டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 30.07.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 036 - Madurai | Online Edition

# பருவமழை, வானிலை நிகழ்வுகள் குறித்த நீண்டகால முன்னறிவிப்புக்கான கணிப்புகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள்

புது தில்லி, ஜூலை 29

நாட்டில் பருவமழை, வானிலை நிகழ்வுகள் குறித்த நீண்டகால முன்னறிவிப்புகள் தொடர்பான கணிப்புகளை மேம்படுத்த மத்திய அரசு தொடர் நடவடிக்கைகைகளை மேற்கொண்டு வருகிறது.

பருவநிலை மாதிரிகளைக் கொண்ட தரவுகள், இடம் சார்ந்த தெளிவு திறன், மேம்பட்ட தரவு ஒருங்கிணைப்பிற்கான தொழில் நுட்பங்கள் போன்றவை மூலம் வானிலை முன்னறிவிப்பு தொடர்பான தரவுகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ், வானிலை ரேடார் அமைப்புகள், தானியங்கி வானிலை நிலையங்கள், தானியங்கி மழைமானிகள், வளிமண்டல மேலடுக்கு கண்காணிப்பு அமைப்புகள், காற்று தொடர்பான விவரக் குறிப்புகள் உள்ளிட்ட பல்வேறு கண்காணிப்புத் தளங்கள் மூலம் நாடு தழுவிய கண்காணிப்பு கட்டமைப்புகளை விரிவுபடுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உள்நாட்டு வானிலை செயற்கைக்கோள் மூலம் அதுசார்ந்த கண் காணிப்பு அமைப்புகளை விரிவுபடுத்துவதற்கும் வானிலை தொடர் பான முன்னறிவிப்பை துல்லியமாக வழங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகள் இந்த திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. இணைய தளங்கள், மொபைல் செயலிகள், குறுஞ்செய்திகள், தொலைக் காட்சி, வானொலி, சமூக ஊடகங்கள் உள்ளிட்ட பல்வேறு தகவல் தொடர்பு தளங்கள் மூலம் வானிலை சார்ந்த முன்னறிவிப்புகளை வெளியிடுவதற்கும் இது உதவிடும்.

மக்களவையில் மத்திய புவி அறிவியல் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் எழுத்து மூலம் அளித்துள்ள பதிலில் இதனைத் தெரிவித்துள்ளார்.

# டிஏபி அதிகமாக விற்பனை செய்த தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர்கள் மற்றும் தனியார் சில்லறை உர விற்பனையாளர்கள் ஆய்வு கூட்டம் நடைபெற்றது



அரியலூர், ஜுலை 29

அரியலூர் மாவட்டத்தில், சென்னை வேளாண்மை துணை இயக்குனர் உரம் அறிவுரையின்படி வேளாண்மை உதவி இயக்குனர் தரக் கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் தலைமையில் டிஏபி உரம் அதிகமாக விற்பனை செய்த தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர்கள் மற்றும் தனியார் சில்லறை உர விற்பனையாளர்கள் பங்கேற்ற ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் தரக் கட்டுப்பாடு டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறியதாவது, யூரியா மற்றும் டிஏபி உரங்களை விவசாயிகளின் பயிர் மற்றும் நிலத்துக்கு ஏற்ப மட்டுமே விற்பனை செய்ய வேண்டும். அடிவுரமாக டிஏபிக்கு பதிலாக ட்ரிப்பில் சூப்பர் பாஸ்பேட் பயன்படுத்தலாம். விற்பனை நிலையத்துக்கு வரும் விவசாயிகளிடம் கண்டிப்பாக அவர்கள் சாகுபடி செய்யும் பயிர்களுக்கு ஒருங்கிணைந்த உர மேலாண்மை மற்றும் சமச்சீர் உரம் இடுதல் பற்றி தெளிவாக எடுத்துக் கூற வேண்டும். விவசாயிகளிடம் கட்டாயப்படுத்தி இணை பொருள்களை வழங்கக் கூடாது. உரம் இருப்பு மற்றும் அதன் விலையை விவசாயிகள் அறியும் பண்ணும் பலகையில் எழுதி பராமரிக்க வேண்டும். உரங்களை பி ஓ எஸ் இயந்திரம் மூலம் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும், விவசாயிகளுக்கு யூரியா உரங்களை அதிகமாக கொடுக்கக் கூடாது. யூரியா உரங்களை விற்பனை செய்யும் போது கண்டிப்பாக பில் முகவரி உடன் விவசாயியின் தொலைபேசி எண்ணுடன் விவசாயியின் கையொப்பம் பெற்று கொடுக்க வேண்டும்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

எப்பொழுதும் விற்பனை நிலையத்தில் இருப்பு உரங்கள் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும் .உரம் வைத்திருக்கும் கிடங்குகளுக்கு அவசியம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதி பெற்றுள்ள உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும், உரங்களின் அதிகபட்ச விலை மாற்றப்பட்டிருந்தால், புதியதாக வரும் உரம் மூட்டைகளை தனியாக பராமரிக்க வேண்டும்.

பழைய உரம் மூட்டையை தனியாகவும் வைத்திருக்க வேண்டும் உரம் முட்டையில் அதிகபட்ச விலைக்கு மேல் விற்பனை செய்யக்கூடாது, உரங்களை வேறு மாவட்டத்திற்கு விற்பனை செய்யக் கூடாது. செய்யப்பட்டது என்பதை அறிந்தால் உரம் உரிமம் ரத்து செய்வதுடன் அத்தியாவசிய பொருள் சட்டம் 1955 இன் படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும், என்று கூறினார் மேலும் விவசாயிகள் யூரியா உரத்தை அதிகமாக பயன்படுத்தக்கூடாது. அடி உரமாக பயன்படுத்தக் கூடாது, அடி உரமாக காம்ப்ளக்ஸ் உரங்களையும் பயன்படுத்த வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் கலைக் கொல்லியுடன் சேர்த்து பயன்படுத்தக் கூடாது. விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும்.

அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம். டிஏபி உரங்களும் அதிக அளவு உதவி விவசாயிக்கு வழங்கக்கூடாது , நானோ யூரியா, நானோ டி ஏ பி விவசாயிகளுக்கு எடுத்து கூறி பயன்படுத்த வேண்டும்,

வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங்களையும், அனைத்து வகையான பயிருக்கு ஏற்ற நுண் ஊட்டச்சத்து உரங்களை பயன் படுத்துவதால் பயிருக்கு வழங்கப்படும் உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?



## 2. ஸ்வீட் கார்ன் சூப்

**தேவையான பொருட்கள்**

ஸ்வீட் கார்ன் — 1 கப்

வெங்காயம் — 1

மிளகு தூள் — ½ டீஸ்பூன்

சோள மாவு — 1 டீஸ்பூன்

உப்பு — தேவையான அளவு

தண்ணீர் — 3 கப்

**செய்முறை**

கார்னை வேக வைத்து பாதியை அரைக்கவும். அனைத்தையும் சேர்த்து கொதிக்கவிட்டு சோள மாவு கரைசலை சேர்த்து கெட்டியாகும் வரை சமைக்கவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# வாலாஜா வட்டாரத்தில் விவசாயிகளுக்கான வயல் விழா நிகழ்ச்சி




இராணிப்பேட்டை, ஜுலை 29

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில், வேளாண்மை துறையின் சார்பாக ஆத்மா திட்டத்தில் விவசாயிகளுக்கான வயல் விழா மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சி, வேளாண்மை இணை இயக்குனர் சுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

விவசாயிகள் விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் திலகவதி தலைமையேற்று, துவங்கி வைத்து 2026-27, ஆம் ஆண்டு வேளாண்மை துறையினரால் செயல் படுத்தபடும், குருவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டம், பயறு வகைகளின் தன்னிறைவுக்கான இயக்கம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் மக்காச்சோளம் மற்றும் துவரை செயல் விளக்கம் ஆகிய திட்டங்கள் குறித்து சிறப்புரையாற்றினார்.

கோடீஸ்வரி, பட்டு வளர்ச்சி துறை உதவி கண்காணிப்பாளர், பட்டு வளர்ச்சி துறையின் திட்டங்கள் மற்றும் அதன் மூலம் விவ சாயிகள் பயனடையும் முறைகள் குறித்தும் பாரதி, வேளாண்மை அலுவலர் மண் ஆராய்ச்சி நிலையம், மண் ஆய்வின் முக்கியத்துவம், மண் பரிசோதனைக்கு மண் எவ்வாறு எடுப்பது, மண்வள அட்டையின் முக்கியம் குறித்தும் விளக்கினார். வேளாண் பொறியியல் துறை உதவி பொறியியலாளர் ஸ்வர்ண லட்சுமி, பொறியியல் துறை சார்ந்த திட்டங்களான மானியத்தில் மின் மோட்டார் பம்ப் செட்டுகள், சூரிய மின்வேலி நிறுவுதல், வேளாண் விலைப் பொருட்களை மதிப்புக்கூட்டம் இயந்திரம் மையங்கள் அமைத்தல், வேளாண் இயந்திரங்கள் குறித்தும் விளக்கினார். சந்துரு, வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை வேளாண் அலுவலர், ஒழுங்கு முறை விற்பனை கூடம், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், உழவர் சந்தை, ஆகிய துறை சார்ந்த திட்டங்கள் குறித்து அதன் மூலம் பயனடைவது குறித்தும் விளக்கினார்.

ஆதிபராசக்தி வேளாண்மை கல்லூரி உதவி பேராசிரியர் பொன்னுசாமி, பயிர்களுக்கு ஏற்படும் நோய்கள் மற்றும் பூச்சி தாக்குதல் குறித்தும் அதனை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்தும் விளக்கினார்.

விரிஞ்சிபுரம் அறிவியல் ஆராய்ச்சி நிலையம் உதவி பேராசிரியர் சித்ரா, விவசாயிகள் சார்ந்த சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் மு.சசிகலா, உழவன் செயலி மற்றும் தமிழ்மண்வளம் ஆத்மா திட்டங்களின் பயன்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார்.

இதனைத் தொடர்ந்து வாலாஜா வட்டார வேளாண்மை துறை சார்பாக அமைக்கப்பட்ட வேளாண் தொழில் சார்ந்த கண்காட்சியை விவசாயிகள் கண்டனர். நர்மதா, ஜெயபிரகாஷ், உதவி தொழில்நுட்ப மேலாளர் கலந்து கொண்ட விவசாயி களுக்கு நன்றி கூறி நிகழ்ச்சியை நிறைவு செய்தனர்.

# சூரன்கோட்டை கிராமத்தில் பண்ணைப்பள்ளி விவசாயிகள் பயிற்சி

இராமநாதபுரம், ஜூலை 29

இராமநாதபுரம் வட்டாரம், சூரன்கோட்டை கிராமத்தில் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை – விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் நெற்பயிரில் வேளாண் சூழ்நிலை மேலாண்மை குறித்த பண்ணைப் பள்ளி விவசாயிகள் பயிற்சி நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் வரவேற்புரை ஆற்றிய இராமநாதபுரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அம்பேத்குமார், வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள், மானிய விபரங்களை உழவன் செயலி மூலம் பதிவு செய்தல் மற்றும் மானிய விபரங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

இராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) பொ.இராஜா, தலைமையில் நடைபெற்றது. அவர் தம் உரையில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் கீழ் செயல்படுத்தப்படும் விவசாயிகள் பயிற்சி, பட்டறிவு பயணம், செயல்விளக்கங்கள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத் துரைத்தார். பயிற்சியில் கலந்து கொண்ட வேளாண் அலுவலர் தமிழ், விதை கடினப்படுத்துதல், பூஞ்சான கொல்லி மருந்து விதை நேர்த்தி மற்றும் உயிர் உரங்கள் விதை நேர்த்தி முறைகள் கடை பிடிக்க விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். விதை நேர்த்தி செய்து விதைப்பதன் மூலம் பயிர்கள் சீராக வளர்வதுடன் வறட்சி தாங்கி வளரும் சக்தி அதிகரிக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். இராமநாதபுரம் வட்டார வேளாண்மை அலுவலர் இரவிசந்திரன், இயற்கை உரங்களின் நன்மைகள், அவற்றின் பயன்பாடு, ஒவ்வொரு பயிருக்கும் எந்தெந்த உயிர் உரங்களைப் பயன்படுத்தலாம் என்பதை விளக்கி கூறினார்.

இப்பயிற்சியில் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் தொழில்நுட்ப வல்லுநர்கள் தமிழ் அருவி மற்றும் மு.பாலாஜி ஆகியோர் கலந்து கொண்டு செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள், மானிய விபரங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் பண்ணைப்பள்ளிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 25 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை இராமநாதபுரம் வட்டார உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் த.இராஜேஸ்குமார் மற்றும் ம.அபினா ஸ்ரீ ஆகியோர் செய்திருந்தனர். பயிற்சியின் நிறைவாக வட்டார தொழில்நுட்ப மேலாளர் ப.கோசலாதேவி நன்றியுரை கூறினார்.



# விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து வேளாண் மாணவர்கள் எடுத்துரைப்பு



தென்காசி, ஜுலை 29

தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டம் மற்றும் வட்டார ஊராட்சி வளர்ச்சி திட்டம் 2026-2027 ஆண்டு திட்டம் தயாரித்தல் தொடர்பான கூட்டத்தில் வேளாண்மை இறுதியாண்டு மாணவிகள் தங்களது RAWE (Rural Agricultural Work Experience) களப்பயணத்தின் போது விவசாயிகளிடமிருந்து கண்டறிந்த முக்கிய பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்து விளக்கமளித்தனர். இக்கூட்டத்தில் ஊராட்சி மன்றத் தலைவர்களும் பங்கேற்றனர்.

கள ஆய்வின் அடிப்படையில், பயிர்களில் பூச்சி மற்றும் நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்த நீண்டகால விளைவுகளைப் பற்றிய விழிப்புணர்வு இல்லாமல் ரசாயன பூச்சிக்கொல்லி மற்றும் நோய்க் கொல்லி மருந்துகள் அதிகளவில் பயன்படுத்தப்படுவதாகவும், உடனடி பலன் மற்றும் இலாப நோக்கத்தால் இயற்கை வேளாண்மையை பலர் ஏற்றுக்கொள்ள தயக்கம் காட்டுவதாகவும் மாணவர்கள் தெரிவித்தனர். மேலும், தொழில்நுட்ப ஆலோசனையின்றி உரக்கடைகளின் பரிந்துரைகளை மட்டுமே நம்பி ரசாயனங்களை பயன்படுத்தும் நடைமுறை காணப்படுவதாகவும் குறிப்பிட்டனர். பயிர் நோய்களை அறிகுறிகளின் அடிப்படையில் ஆரம்ப நிலையிலேயே கண்டறிய உதவும் Plantix போன்ற மொபைல் செயலிகள் குறித்து விவசாயிகளிடையே போதிய விழிப்புணர்வு இல்லை என்றும், அவற்றின் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டனர்.

மண் பரிசோதனையின் முக்கியத்துவம் குறித்தும் விவசாயிகளிடம் போதிய விழிப்புணர்வு இல்லை என தெரிவித்த மாணவிகள், வயல் பயிர்களுக்கு 2-3 ஆண்டுகளுக்கு ஒரு முறையும், காய்கறி மற்றும் பழப்பயிர்களுக்கு ஆண்டுதோறும் மண் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்றும், அதன் அறிக்கையின் அடிப்படையில் உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் தேவையற்ற செலவுகளைக் குறைத்து மகசூலை அதிகரிக்க முடியும் என எடுத்துரைத்தனர்.

அறுவடைக்குப் பின்னர் அரசு வழங்கும் சேமிப்பு கிடங்குகள் மற்றும் சேமிப்பு வசதிகள் குறித்த தகவல் பற்றாக்குறை, சேமிப்பின் போது ஏற்பட்ட இழப்புகள் மற்றும் உடனடி பணத் தேவை ஆகிய காரணங்களால், பெரும்பாலான விவசாயிகள் அரசு கொள்முதல் மையங்களை விட தனியார் வியாபாரிகளிடம் விளைபொருட்களை விற்பனை செய்வதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும், இயற்கை பேரிடர் நிவாரணத் திட்டங்கள், நிவாரணம் பெறும் நடைமுறைகள் மற்றும் விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FPO) குறித்தும் போதிய விழிப்புணர்வு இல்லாதது கள ஆய்வில் தெரியவந்ததாக மாணவர்கள் தெரிவித்தனர்.

விவசாயிகளுக்கான தொடர்ச்சியான பயிற்சி முகாம்கள், தொழில் நுட்ப விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் அரசு நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாம்களை அதிகளவில் நடத்துவதன் மூலம் இக்குறைபாடுகளை சரிசெய்ய முடியும் என்று மாணவர்கள் எடுத்துரைத்தனர்.

இக்கூட்டத்தில் கலசலிங்கம் பல்கலைக்கழக வேளாண் இறுதி ஆண்டு மாணவிகள் பத்மஸ்ரீ ஜோதி.ச, கமலேஸ்வரி.அ, அபர்ணா தேவி.ர, பிரியதர்ஷினி.பூ, யாழினி.த, ஞானமதி.கு, ஆகியோர் பங்கேற்று தங்களது கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

# நவீன வேளாண் இயந்திரங்கள் குறித்து விவசாயிகள் பயிற்சி

ஈரோடு, ஜூலை 29

ஈரோடு மாவட்டம், சென்னிமலை வட்டார வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) சார்பில் முருங்கத்தொழுவு கிராமம், உப்பிலிபாளையத்தில் ‘வேளாண் இயந்திரமயமாக்கல் மற்றும் புதிய வேளாண் இயந்திரங்கள் பிரபலப்படுத்துதல்‘ என்ற தலைப்பில் விவசாயிகளுக்கான பயிற்சி நடைபெற்றது.

சென்னிமலை வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) சசிகலா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், விவசாயத் தொழிலாளர்கள் பற்றாக்குறையை சமாளிக்க நவீன வேளாண் இயந்திரங்களின் பயன்பாடு காலத்தின் தேவையாக உள்ளது. இதற்காக அரசு பல்வேறு புதிய வேளாண் இயந்திரங்களை மானியத்தில் வழங்கி வருவதுடன், அவற்றை விவசாயிகளிடம் கொண்டு சேர்க்கும் வகையில் தொடர் பயிற்சிகளையும் நடத்தி வருவதாக தெரிவித்தார்.




பயிற்சியில் மைராடா கே.வி.கே., கோபிச்செட்டிபாளையம், தொழில்நுட்ப நிபுணர் ஜான் பிரபாகரன் (SMS), நவீன வேளாண் இயந்திரங்கள், அவற்றின் பயன்பாடுகள் மற்றும் இயந்திரமயமாக்கலின் நன்மைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். வேளாண் பொறியியல் துறை, சென்னிமலை உதவி பொறியாளர் ஜெய்ஜனனி, 2026-2027 ஆம் ஆண்டுக்கான வேளாண் இயந்திர மானியத் திட்டங்கள், வாடகை இயந்திர சேவை மையங்கள், மானியத்தில் இயந்திரங்கள் பெறும் நடைமுறைகள் மற்றும் முன்பதிவு செய்வது குறித்து விளக்கமளித்தார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் மோகனசுந்தரம், உழவர் செயலி, ஊ-வாடகை செயலி உள்ளிட்ட டிஜிட்டல் வேளாண் செயலிகளின் பயன்பாடுகள், மண் வள மேலாண்மை மற்றும் தென்னை உள்ளிட்ட பயிர்களுக்கான வறட்சி மேலாண்மை தொழில் நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

இப்பயிற்சியில் முருங்கத்தொழுவு கிராமத்தைச் சேர்ந்த 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் மகேஸ்வரி மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் வேலுமணி ஆகியோர் செய்திருந்தனர்.




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# யூரியாவுக்கு மாற்றாக அன்ஹைட்ரஸ் அம்மோனியா பயன்படுத்தலாமா?



தற்போது எங்கும் யூரியா தட்டுபாடாக உள்ளது. விவசாயிகள் பயிருக்கு தேவைக்கு மேல் அதிக மாக பயன்படுத்துவதால் யூரியா பற்றாக்குறையாக உள்ளது. இதற்கு மாற்றாக என்ன உரங் களை போடலாம் என சிந்தித்து பார்க்கையில் அன்ஹைட்ரஸ் அம்மோனியா (ANHYDROUS AMMONIA) விவசாயத்திற்கு வெளிநாட்டில் பயன்படுத்துவது போல நம் நாட்டிலும் பயன் படுத்திட மத்திய அரசு அனுமதியளித்துள்ளது.

**அன்ஹைட்ரஸ் அம்மோனியா?**

இது நீரற்ற அமோனியா திரவ வடிவலான உரம். யூரியாவை விட 82% தழைச்சத்து (NITROGEN) உள்ளது. இந்த வாயுவை நிலங் களில் மண்ணுக்குள் பயன்படுத்துவதன் மூலமாக (உட் செலுத்தும் சிறப்பு தொழில்நுட்பம் அதற்கான உட்கட்டமைப்பை உருவாக்க வேண்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. IT'S AS AN INDUSTRIAL REFRIGENENT. COLOUR LESS PUNGENT ODOUR. HYDROS COPIC NATURE.) இது 100% PURE AMMONIAவாகும்.

**எந்த எந்த நாடுகளில் இதனை உரமாக பயன்படுத்தலாம்?**

அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியாவுக்கு அடுத்த படியாக நமது நாடு (இந்தியா) உலகின் 4 வதுநாடாகும்.

**மத்திய அரசு எப்போது அனுமதி அளித்துள்ளது?**

விவசாயத்திற்கு பயன்படுத்த உரங்கள் கட்டுப்பாட்டு ஆணை 1982/ 20A, பிரிவின்படி அரசிதழில் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 3 ஆண்டுக்குள் எந்தவொரு நிறுவனமும் உற்பத்தி செய்யலாம், இந்த நடைமுறை கடந்த ஜூலை 23 ஆம் தேதி முதல் (GOVT GASSETTE) வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டில் செயல்படும் யூரியா தொழிற்சாலைகளில் ஆண்டு தோறும் 2000 முதல் 6500 டன் வரை உபரியாக அமோனியா உருவாகிறது.

உற்பத்தி திறன் வரம்பு காரணமாக அதை யூரியா தயாரிப்பில் பயன்படுத்த முடியாததால் தற்போது விற்பனை செய்யப்படுகிறது. இனி இந்த உபரி அம்மோனியாவை விவசாய பயன்பாட்டிற்கும் உர உற்பத்திக்கும் முன்னுரிமை அளிக்கும் வகையில் பயன் படுத்திட அரசு திட்டமிட்டுள்ளது.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கவுன்சில் (ICAR) சார்பில் இந்த பசுமை அமோனியாவை பல்வேறு ஆராய்ச்சி நிலையங் களில் பரிசோதனை செய்யப்பட்டதில்,நேரடி நெல் விதைப்பு சாகுபடியில் நடத்தப்பட்ட சோதனையில், வழக்கமான யூரியா பயன்படுத்தி யதை விட அதிக உயிர்ப்பு தன்மையும் நல்ல பசுமையான வளர்ச்சி கிடைத்தாக தரவுகள் உள்ளன. மத்திய அரசின் இந்த முயற்சி வெற்றி பெற்றால், நாட்டில் யூரியா இறக்குமதி செலவு குறைவதுடன் நாட்டின் உரத்தேவைகளில் தன்னிறைவு ஏற்படும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# அற்பிசம்பாளையம் கிராமத்தில் ஆட்மா திட்டம் மூலம் பண்ணை பள்ளி வகுப்பு



விழுப்புரம், ஜுலை 29

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியம், அற்பிசம் பாளையம் கிராமத்தில் வேளாண்மை துறையில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண் முகமை திட்டம் மூலம் பண்ணை பள்ளி நடத்தப்பட்டது.

வேளாண்மை உதவி இயக்குனர் Dr. பாலசுப்பிரமணியனின் வழிகாட்டுதலின்படி வேளாண்மை அலுவலர் விஜய் முன்னிலை வகித்தார். துணை வேளாண் அலுவலர் தமிழ்செல்வன், விதை முதல் விதை வரை அனைத்து தொழில்நுட்பங்களும் விரிவாக கூறினார். திண்டிவனம் வேளாண் அறிவியல் பயிர் பாதுகாப்பு நிலைய இணை பேராசிரியர் முனைவர் செந்தமிழ், ஒருங் கிணைந்த பூச்சி நோய் மற்றும் நூற்புழு மேலாண்மை குறித்து பயிற்சி அளித்தார்.

அற்பிசம்பாளையம் சுற்று வட்டார பகுதிகளில் பயிரிடப்படும் நெல் பயிரில் இளைப்பேன் மற்றும் பயிர் மேலாண்மை மற்றும் பாசி மேலாண்மை குறித்தும் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தார். உதவி வேளாண்மை அலுவலர் சபியா, வேளாண் திட்டப் பணிகள் பற்றி விளக்கமாக கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் தேன்மொழி, ஆத்மா திட்டம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார். உதவி தொழில் நுட்ப மேலாளர் வீரமணி நன்றி கூறினார். பண்ணை பள்ளிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் அருள் பாபு செய்திருந்தார்.



# பச்சைபயறு பயிர்களில் மஞ்சள் தேமல் நோய் அறிகுறிகள் மற்றும் நிவர்த்தி தொழில்நுட்பங்கள் விஞ்ஞானிகள் விவசாயிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி



ஈரோடு, ஜூலை 29

ஈரோடு மாவட்டம், எலச்சிபாளையம் வட்டாரம் வேளாண் துறையின் சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் 67 கவுண்டம்பாளையம் கிராமத்தில் பச்சை பயறு பயிர்களில் மஞ்சள் தேமல் நோய் அறிகுறிகள் மற்றும் நிவர்த்தி தொழில்நுட்பங்கள் பற்றிய விஞ்ஞானிகள் விவசாயிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஏத்தாப்பூர் வேளாண் அறிவியல் நிலைய இணை பேராசிரியர் நடராஜன் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு தொழில் நுட்பங்களை கூறினார்.

மேலும் இக்கலந்துரையாடல் நிகழ்ச்சியில் வேளாண்மை உதவி இயக்குனர் எலச்சிபாளையம் பெ.ஜெயமாலா மற்றும் வேளாண் துறை உதவி வேளாண்மை அலுவலர்கள் வெற்றிவேல், பூபதி மற்றும் பயிர் அறுவடை பரிசோதனையாளர் சுகன் ஆகியோர் கலந்து கொண்டனர். இப்பயிற்சிகான ஏற்பாடுகளை வட்டார தொழில் நுட்ப மேலாளர் திவாகர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் தமிழ்ச் செல்வன், வாசுகி ஆகியோர் செய்திருந்தனர்.

# விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடந்தது

இராணிப்பேட்டை, ஜூலை 29

இராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டார வேளாண்மைத் துறை அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி கீழ்வீதி கிராமத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு தலைமை வகித்த இராணிப்பேட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சுந்தரம், வேளாண் அடுக்கத்தில் பதிவு செய்யாத விவசாயிகள் உடனடியாக பதிவு செய்யுமாறு கேட்டுக் கொண்டார். மேலும் குறுவை சாகுபடி தொகுப்பு, உயிர் உரங்கள் பயன்பாடு மற்றும் மண்வளம் காக்க பசந்தாள் உரம் சாகுபடி செய்யுமாறும் கேட்டுக் கொண்டார். நெமிலி வேளாண்மை உதவி இயக்குனர் அருணா குமாரி முன்னிலை வகித்தார்.

அவர் பேசுகையில் விவசாயிகள் மண் பரிசோதனை செய்து அதன் பரிந்துரையின் அடிப்படையில் உரங்களை பயன்படுத்து மாறும், பயிர் சுழற்சி முறையில் சாகுபடி செய்யுமாறும் கேட்டுக் கொண்டார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் நிர்மலா தேவி அனைவரையும் வரவேற்று பேசினார்.



விரிஞ்சிபுரம் வேளாண் அறிவியல் நிலையத்திலிருந்து கலந்து கொண்ட கால்நடைத் துறை பேராசிரியர் ராமசாமி, மாடுகளுக்கு வரும் மடிப்பு நோய் பாதுகாப்பு, தடுப்பூசி குறித்தும் மேலும் ஆடு, மாடு கோழி ஆகியன வளர்ப்பதற்கான மானியங்கள் குறித்தும் பேசினார். டான் பாஸ்கோ வேளாண்மை கல்லூரியில் இருந்து கலந்து கொண்ட பேராசிரியர் விக்னேஷ் இயற்கை வேளாண்மை, நுண்ணூட்டச் சத்துக்கள் அதிகப்படியான யூரியா இடுவதால் நிலத்தடி நீர்மட்டம் எவ்வாறு பாதிக்கிறது என்பதையும் விவசாயி களுக்கு விரிவாக எடுத்துக் கூறினார். தோட்டக்கலை துணை வேளாண்மை அலுவலர் ஜெயச்சந்திரன், தோட்டக்கலை பயிர் சாகுபடி, காய்கறி நாற்று மேலாண்மை மற்றும் மானியம், தோட்டக்கலை பயிர்களுக்கான சொட்டு நீர் பாசனம் குறித்தும் விளக்கம் அளித்தார். வேளாண் பொறியியல் துறை சார்பாக கலந்து கொண்ட வேளாண் பொறியாளர் செந்தில்குமார், டிராக்டர் மற்றும் இயந்திரங்கள் வாடகை குறித்தும் பண்ணை இயந்திரங்கள் மானியம் குறித்தும் பேசினார். நிகழ்ச்சியில் ஏரி பாசன தலைவர் சிவகாமிநாதன், உதவி தொழில்நுட்ப மேலாளர் முகிலன், வி.ஜ.டி வேளாண்மை கல்லூரி மாணவர்கள் மற்றும் 60க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.



# ஆடிப்பட்டத்தில் விதைக்க விவசாயிகளுக்கு அழைப்பு!

தர்மபுரி, ஜூலை 29

'ஆடிப்பட்டம் தேடி விதை' என்ற பழமொழிக்கு ஏற்ப விவசாயிகள் ஆடிப்பட்டத்தில் விதைத்தால் அதிக மகசூலைப் பெறலாம் என விதைப்பரிசோதனை அலுவலர் இரா.கிரிஜா தெரிவித்துள்ளார்.

கோடை வெப்பம் தணிந்து பருவமழை துவங்கும் காலம் ஆடி மாதம் ஆகும். ஆடிப்பெருக்கு அன்று தண்ணீர் வசதியுள்ள விவசாயிகள் விவசாய பணிகளை மேற்கொள்வர். அதிக மகசூலை பெற தரமான விதைகளை பயன்படுத்துவது அவசியம். இதன் மூலம் குறைந்த விதை அளவு, சீரான மற்றும் வேகமான முளைப்புத்திறன், சரியான பயிர் எண்ணிக்கை, ஒருமித்த பூக்கும் தன்மை, சீரான முதிர்ச்சி பருவம், குறைவான பூச்சி மற்றும் நோய் தாக்குதல் போன்ற நன்மைகளைப் பெறலாம். மேலும் 15 முதல் 20 சதவீதம் வரை கூடுதல் மகசூலும் கிடைக்கும். எனவே, விவசாயிகள் சான்று பெற்ற விதைகளையே வாங்கிப் பயன்படுத்த வேண்டும்.

மாவட்ட விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகளை பரிசோதனை செய்ய ஒரு விதை மாதிரிக்கு ரூ.80/- ஆய்வுக் கட்டணமாக செலுத்தி, பயிர், ரகம் மற்றும் குவியல் எண் ஆகியவை குறித்த விவரச்சீட்டுடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் பின்புறம் செயல்பட்டு வரும் விதைப்பரிசோதனை நிலையத்தில் நெல், சோளம்-100 கிராம், உளுந்து-150 கிராம், நிலக்கடலை, மக்காச் சோளம்-500 கிராம், கம்பு, ராகி, சாமை, தினை, குதிரைவாலி-25 கிராம், கத்தரி, முள்ளங்கி, மிளகாய்-10 கிராம், பாகற்காய், புடலங் காய்-250 கிராம், சாம்பல் பூசணி, சுரைக்காய், தர்பூசணி-100 கிராம், பீன்ஸ், அவரை-450 கிராம் ஆகிய அளவில் விதை மாதிரி எடுத்து தங்களது முழு முகவரியுடன் கூடிய கடிதத்துடன் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி விதையின் முளைப்புத்திறன் அறிந்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டுமாறு விதை பரிசோதனை அலுவலர் இரா.கிரிஜா கேட்டுக்கொள்கிறார்.



# நுண்தளிர் கீரைகளின் மகத்தான நன்மைகள் – கருத்தரங்கு



திண்டுக்கல், ஜூலை 29

திண்டக்கல் மவாட்டம், பழனி, அருள்மிகு பழனி–யாண்டவர் கலைக்கல்லூரி மகளிர் (தன்னாட்சி), முதுகலை தாவரவியல் துறையின் சார்பில் ‘நுண்தளிர் கீரைகள் (Micro-greens) — சிறிய தளிர்கள், மகத்தான நன்மைகள் (Tiny Greens & Mighty Benefits)‘ என்ற தலைப்பில் சிறப்பு சொற்பொழிவு 29.07.26 அன்று காலை 10.30 மணிக்கு கல்லூரி அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் முனைவர் ந.புவனேஸ்வரி, வரவேற்புரை வழங்கி, நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து அனைவரையும் வரவேற்றார். தாவரவியல் துறைத் தலைவர் முனைவர் ஆர்.பிரேமா, நிகழ்ச்சியின் வளமுனைவரை அறிமுகப்படுத்தினார்.

இந்நிகழ்ச்சியின் வளமுனைவராக டி.யுவராஜா தட்சணாமூர்த்தி, உதவிப் பேராசிரியர் மற்றும் வேளாண் பொறியாளர் (ஓய்வு), ஸ்ரீ சக்தி பொறியியல் கல்லூரி, கோயம்புத்தூர், கலந்து கொண்டு, நுண்தளிர் கீரைகளின் வளர்ப்பு முறைகள், அவற்றின் ஊட்டச்சத்து மதிப்பு, உடல்நல நன்மைகள், வணிக வாய்ப்புகள் மற்றும் தொழில் முனைவோர் வாய்ப்புகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். மேலும், வீட்டிலேயே எளிய முறையில் நுண்தளிர் கீரைகளை வளர்ப்பது தொடர்பான செய்முறை விளக்கங்களையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தாவரவியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த சுமார் 300 மாணவிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு பயனடைந்தனர். இறுதியாக, நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளரும் இணைப் பேராசிரியருமான முனைவர் வி.வனிதா, நன்றியுரை வழங்கினார்.

மாணவிகள் தங்களது சந்தேகங்களுக்கு விளக்கங்களைப் பெற்று, நுண்தளிர் கீரைகளின் ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் தொழில்முனைவு தொடர்பான புதிய அறிவைப் பெற்றனர். நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# ஆடி விதைப்பு அருமையான மகசூல்



தமிழில் உள்ள பனிரெண்டு மாதங்களில் ஆடி மாதத்திற்கென்று ஒரு தனிச்சிறப்பு உண்டு. விதை விதைப்பு முதல் அம்மன் திருவிழாக்கள் வரை வெகு விமர்சையாக கொண்டாடப்படும் மாதம் இது. கோடை வெப்பம் தணிந்து பருவமழை ஆரம்பிக்கும் காலம். ஆகவே தான் நம் முன்னோர்கள், 'ஆடிப்பட்டம் தேடி விதை' என்ற பழமொழியைக் கூறிச்சென்றனர். ஆடி மாதம் ஆடிப்பெருக்கு விழா விவசாயிகளால் சிறப்பாக கொண்டாடப்படும். தண்ணீர் வசதியுள்ள விவசாயிகள் அன்று நாற்று விடுதல், விதைப்பு செய்தல் பணிகளை மேற்கொள்வர்.

பெரும்பாலும் ஆடி மாதங்களில் காய்கறி பயிர்களை சாகுபடி செய்வர். மேலும் பருவமழையை எதிர்பார்த்து சாகுபடி செய்யப்படும் மானாவாரி பயிர்களை விதைப்பு செய்வதற்கும் இம்மாதம் மிகவும் ஏற்றதாகும். தரமான விதையைத் தேர்வு செய்து விதை நேர்த்தி செய்து சாகுபடி செய்தால் சரியான பயிர் எண்ணிக்கையை உறுதி செய்து அதிகம் மகசூல் பெற்று அதிக லாபம் பெறலாம். விவசாயத்திற்கு விதையே ஆதாரம். விதையின் சுத்தத்தன்மை, ஈரப்பதம், முளைப்புத்திறன் இவற்றை நல்ல முறையில் பராமரிப்பதால் மட்டுமே நல்ல மகசூலைப் பெற இயலும்.

எனவே விவசாயிகள் தாங்கள் விதைப்பு செய்ய உள்ள விதையின் தரத்தை அறிய விருதுநகர், விதைப்பரிசோதனை நிலையத்தில் ரூ.80/– (மாதிரி ஒன்றுக்கு) மட்டும் செலுத்தி விதை முளைப்புத்திறனை அறிந்து ஆடி மாதத்தில் விதைப்பு செய்து அருமையான லாபம் பெற வேண்டுமாறு விதைப்பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி, வேளாண் அலுவலர்கள் இ.ஜானகி மற்றும் சாய்லெட்சுமி சரண்யா ஆகியோர் தெரிவித்துள்ளனர். மேலும் 94868 58066 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு விதைப்பரிசோதனை தொடர்பான சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளுமாறு விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# துல்லிய வேளாண்மை குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய கல்லூரி மாணவிகள்



திண்டுக்கல், ஜூலை 29

திண்டுக்கல் மாவட்டம், காந்தி கிராம வேளாண் மாணவிகள் துல்லிய வேளாண்மை குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

ஈரோடு மாவட்டம், வெள்ளோடு பகுதியில் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டம் ஒரு பகுதியாக, வேளாண் கல்லூரி மாணவர்கள் முன்னோடி விவசாயி ராஜாவின் பண்ணைக்கு நேரில் சென்று, அவரது சாகுபடி முறைகள் மற்றும் வேளாண் அனுபவங்களை அறிந்து கொண்டு பயிர் சாகுபடி, கால்நடை வளர்ப்பு மற்றும் விவசாயிகள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் குறித்து மாணவர்கள் கலந்துரையாடி, அவற்றை பதிவு செய்தனர்.

மேலும், மாணவர்கள் துல்லிய வேளாண்மை குறித்து விவசாயிக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். சொட்டு நீர்ப்பாசனம், மண் பரிசோதனை, ஜி பி எஸ் தொழில்நுட்பம், சென்சார்கள் மற்றும் தரவுகளின் அடிப்படையிலான ஊட்டச்சத்து மேலாண்மை போன்ற நவீன தொழில்நுட்பங்கள் பண்ணை நிர்வாகத்தை எவ்வாறு மேம்படுத்துகின்றன என்பதை விளக்கி துல்லிய வேளாண்மை மூலம் நீர், உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து களை சிக்கனமாக பயன்படுத்த முடியும், உற்பத்திச் செலவு குறையும், மகசூல் அதிகரிக்கும், மண்ணின் வளம் பாதுகாக்கப் படும், சுற்றுச்சூழல் மாசுபாடு குறையும் மற்றும் வளங்களை திறமையாக பயன்படுத்துவதன் மூலம் விவசாயிகளின் வருமானம் அதிகரிக்கும் என்பதை எடுத்து கூறினர்.

மாணவர்கள் பகிர்ந்த நவீன வேளாண் தொழில்நுட்பங்களை ராஜா பாராட்டியதுடன், தனது பண்ணையில் துல்லிய வேளாண்மையை நடைமுறைப்படுத்துவதன் நன்மைகள் குறித்து ஆர்வத்துடன் கலந்துரையாடினார். இந்த களப்பயணம், மாணவர்கள் மற்றும் விவசாயிகளுக்கு இடையிலான அறிவுப் பரிமாற்றத்தை மேம்படுத்தி, நிலையான மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த வேளாண்மையை ஊக்குவிக்கும் சிறந்த வாய்ப்பாக அமைந்தது.

# பாப்பாகுடி கிராமத்தில் பண்ணைப்பள்ளி விவசாயிகள் பயிற்சி

இராமநாதபுரம், ஜூலை 29

இராமநாதபுரம் வட்டாரம், பாப்பாகுடி கிராமத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை – விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் இலாபகரமான பால் உற்பத்தி பொருட்கள் குறித்த பண்ணைப் பள்ளி விவசாயிகள் பயிற்சி நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் வரவேற்புரை ஆற்றிய இராமநாதபுரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அம்பேத்குமார், வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள், மானிய விபரங்களை உழவன் செயலி மூலம் பதிவு செய்தல் மற்றும் மானிய விபரங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

இராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் உழவர் பயிற்சி நிலையம் கு.இராஜேந்திரன், தலைமையில் நடைபெற்றது. அவர் தம் உரையில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் கீழ் செயல்படுத்தப்படும் விவசாயிகள் பயிற்சி, பட்டறிவு பயணம், செயல் விளக்கங்கள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

இராமநாதபுரம் மாவட்ட கால்நடைத் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் விஜயலிங்கம், லாபகரமான பால் உற்பத்தி பொருட்கள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். கால்நடை உதவி மருத்துவர் முகம்மது நிஜாமுதீன், கால்நடைத் துறை மூலம் செயல்படுத்தப்படும்மானிய திட்டங்கள், மானிய விபரங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

பண்ணைப் பள்ளியில் வேளாண்மை உதவி இயக்குநர் (த.க) பி.ஜி.நாகராஜன், மற்றும் உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் சீதாலெட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர். பயிற்சியில் கலந்து கொண்ட இராமநாதபுரம் வேளாண்மை அலுவலர் தமிழ், விதை கடினப்படுத்துதல், பூஞ்சான கொல்லி மருந்து விதை நேர்த்தி மற்றும் உயிர்உரங்கள் விதை நேர்த்தி முறைகள் கடைபிடிக்க விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். விதை நேர்த்தி செய்து விதைப்பதன் மூலம் பயிர்கள் சீராக வளர்வதுடன் வறட்சி தாங்கி வளரும் சக்தி அதிகரிக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

இராமநாதபுரம் வட்டார வேளாண்மை அலுவலர், ரவிசந்திரன், இயற்கை உரங்களின் நன்மைகள், அவற்றின் பயன்பாடு, ஒவ்வொரு பயிருக்கும் எந்தெந்த உயிர் உரங்களைப் பயன் படுத்தலாம் என்பதை விளக்கி கூறினார். பயிற்சியில் பண்ணைப் பள்ளிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 25 விவசாயிகள் கலந்து கொண் டனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் நாகேஸ்வரி மற்றும் ராமநாதபுர வட்டார உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் த.ராஜேஸ்குமார் மற்றும் ம.அபினாஸ்ரீ ஆகியோர் செய்திருந்தனர். பயிற்சியின் நிறைவாக வட்டார தொழில்நுட்ப மேலாளர் ப.கோசலா தேவி நன்றியுரை கூறினார்.



# காய்கறி விதைகளை பகுப்பாய்வு செய்தபின் விற்பனை செய்யுங்கள்

விதை விற்பனையாளர்கள் காய்கறி விதைகளை பகுப்பாய்வு செய்தபின் விற்பனை செய்யுமாறு கடலூர், விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் க.விஜயா விடுத்துள்ள செய்திகுறிப்பில் தெரிவித்துள்ளார்.

விதைப்பு மேற்கொள்வதற்கு முன்பு விதைத் தரம் அறிந்து விதைப்பு செய்ய வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். காய்கறி விதைகளில் பெரும்பாலும் உண்மை நிலை விதைகளே விற்பனை செய்யப்படுகின்றன. வெண்டை, மிளகாய், கத்தி, பூசணி, வெள்ளரி, புடலை, பாகற்காய், சுரைக்காய், பரங்கிக்காய் மற்றும் தக்காளி ஆகிய பயிர்களின் விதைகள் பெரும்பாலும் வீரிய ஒட்டு வகை என்பதால் அவற்றின் விலையும் மிக அதிகம். எனவே இவ்விதை களின் விதைத் தரம் குறையாமல் சேமித்து வைத்தல் மற்றும் ஆறு மாதங்களுக்கு மேல் சேமிப்பில் இருந்தால் அதன் தரத்தை மீண்டும் சோதனை செய்த பின் விற்பனை செய்வது மிக அவசியம். காய்கறி பயிர்களான மிளகாய், பூசணி, வெள்ளரி, புடலை, சுரைக் காய், பரங்கிக்காய் போன்ற விதைகளுக்கு குறைந்தபட்ச முளைப்பு திறன் 60 சதவிகிதம் இருத்தல் வேண்டும். கத்திரி மற்றும் தக்காளி ஆகியவற்றின் குறைந்தபட்ச முளைப்புத்திறன் தேவை 70 சதவிகி தமும், வெண்டை மற்றும் மிளகாய் பயிர்களுக்கு குறைந்தபட்ச முளைப்புத்திறன் தேவை முறையே 65 மற்றும் 60 சதவிகிதம் ஆகும்.

எனவே, விதை விற்பனையாளர்கள் தங்களிடம் உள்ள ஒவ்வொரு காய்கறி பயிர் விதைக்குவியலும் பகுப்பாய்வு செய்து குறைந்தபட்ச முளைப்புத்திறனில் தேறியுள்ளதா என்பதை உறுதி செய்து விற்பனை செய்யுங்கள். பகுப்பாய்வு செய்யப்படாத விதைக்குவி-யலாக இருந்தால் பகுப்பாய்வு செய்த பின்னர் விற்பனை செய்யுங்கள். மேலும் காய்கறி பயிர்களின் விதைகளை விதைப் பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பும் போது விதை மாதிரியின் அளவு கீழ்க்கண்டவாறு அனுப்பிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

| வ. எண் | பயிர் | பணி விதை மாதிரி அளவு (கிராம்) |
|---|---|---|
| 1. | வெண்டை, கொத்தவரை, சுரைக்காய், பரங்கிக்காய், பூசணிக்காய், வெள்ளரி | 100 |
| 2. | பாகல், புடலை, பட்டாணி | 250 |

| | | |
|---|---|---|
| 3. | கத்தரி, மிளகாய், தக்காளி | 10 |
| 4. | பீர்க்கங்காய் | 150 |
| 5. | முள்ளங்கி, முளைக்கீரை | 50 |
| 6. | பாலக்கீரை | 25 |
| 7. | அவரை | 450 |

விதைப்பகுப்பாய்வு செய்ய, விதை விற்பனையாளர்கள் (அ) விவசாயிகள் தங்களிடம் உள்ள ஒவ்வொரு விதைக்குவியலில் இருந்தும் மேற்கண்ட அளவு விதை மாதிரிகளை எடுத்து விண்ணப்பக் கடிதத்துடன் இணைத்து விதைப்பரிசோதனை நிலையம், 97,பிருந்தாவன் நகர், பெண்ணை கார்டன், 50 அடி ரோடு, கோண்டூர் போஸ்ட், உண்ணாமலை செட்டிசாவடி, கடலூர் – 607 006 என்ற முகவரியில் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் விதைப் பரிசோதனை ஆய்வகத்தில் கொடுத்து அறிந்து கொள்ளலாம். ஒரு மாதிரியின் பகுப்பாய்வுப் பரிசோதனைக் கட்டணமாக ரூ.80/- ஆகும். இவ்வாறு செய்திகுறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# நெல்லில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் பற்றிய வெளிவளாக பயிற்சி

கடலூர், ஜுலை 29

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பாக நெல்லில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சி 28.07.26 அன்று கீரப்பாளையம் வடதிடாரமதி, சிறுகாலூர் கிராமத்தில் நடைப்பெற்றது.



இப்பயிற்சியில் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் க.நடராஜன், வேளாண்மை அறிவியல் நிலையத்தின் முக்கிய குறிக் கோள்கள் மற்றும் அதிக மகசூல் தரும் உயர் தர இரகங்கள் பற்றியும், விதை உற்பத்தி செய்யும் முறைகள் பற்றியும் விவசாயி களுக்கு எடுத்துரைத்தார். மேலும் விதை நேர்த்தி, உயிர் உரங்கள் பயன்பாடு, பசுந்தாள் உரங்கள் பயன்பாடு, சமச்சீர் உர மேலாண்மை, களை மேலாண்மை, நுண்ணூட்டச்சத்து பயன்பாடு பற்றியும் தெளிவாக விளக்கினார்.

நெல்லில் காணப்படும் பூச்சி நோய் தாக்குதலும் அதன் மேலாண்மை பற்றியும் ஒருங்கிணைந்த பயிர் பராமரிப்பு பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார். த.வே.ப.க. இணையத்தள செயலிகள் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது.

மேலும் மதிப்பு கூட்டப்பட்டபொருட்கள் தயாரிக்கும் முறைகள் பற்றி விளக்கமாக கூறப்பட்டது. இறுதியாக விவசாயிகள், வேளாண் விஞ்ஞானிகளிடம் தனது ஐயங்களை கேட்டு தெளிவு பெற்றனர்.

இப்பயிற்சியில் தனுக்கா உர நிறுவனமும் கலந்துக் கொண்டனர். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், கீரப்பாளையம் வட்டாரத்தில் உள்ள சிறுகாலூர் கிராமத்தை சேர்ந்த 45க்கும் மேற்பட்டோர் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

# வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க பணியாளர்கள் கூட்டு ஆய்வு



சிவகங்கை, ஜூலை 29

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டாரம், வேளாண்மைத் துறையின் மூலம் அட்மா விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 2025-26 ஆம் ஆண்டு மிளகனூர் கிராமத்தில் வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க அலுவலர்கள் விவசாயிகளுடன் இணைந்து பருத்தியில் பூச்சி நோய் மேலாண்மை பற்றிய கலந்தாய்வு நிகழ்ச்சி நடைபெற்றது. துணை வேளாண்மை இயக்குநர் பொ.செல்வம், உழவர் பயிற்சி நிலையம், சிவகங்கை, கலந்தாய்வில் கலந்து கொண்டு ஆய்வு மேற்கொண்டார்.

மானாமதுரை வட்டாரம், வேளாண்மை உதவி இயக்குநர் ஜெ.முருகபாரதி பயிற்சிக்கு தலைமை தாங்கினார் மற்றும் மதுரை RNR அக்ரி டெவலப்பர்ஸ் நிறுவன தலைவர் முனைவர் ராஜேஷ், பருத்தியில் பூச்சி நோய் மேலாண்மை தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். பூச்சி மற்றும் நோய் தாக்குதலில் இருந்து பயிர்களை பாதுகாக்க ஒருங்கிணைந்த முறைகளை கடைபிடிக்க வேண்டும் என விரிவாக எடுத்துக் கூறப்பட்டது. வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.அமிர்தலட்சுமி, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் திவ்யா, வினோத்குமார் ஆகியோர்கள் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# இரு வேறு இடங்களில் நிலம் வைத்திருந்தாலும் விவசாய அடையாள எண்ணில் பதிய வேண்டும்

## வேளாண்மை இணை இயக்குநர் தகவல்

புதுக்கோட்டை, ஜூலை 29

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் விடுபட்ட நிலங்களின் விவரங்களை விவசாய அடையாள எண்ணுடன் இணைத்தால் மட்டும் உரம் உள்ளிட்ட மானியங்களை வருங்காலங்களில் பெற முடியும் என வேளாண்மை இணை இயக்குநர் சு.சுந்தர மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

விவசாய அடையாள எண் பதிவு செய்த ஒரு விவசாயி இரண்டு, மூன்று இடங்களில் வேளாண் நிலங்கள் வைத்திருந்தாலும் அவற்றை தனித்துவ அடையாள எண்ணில் பதிவு செய்ய வேண்டும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. தற்சமயம், மாவட்டத்தில் 1,35,685 விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். தொடர்ந்து, விவசாயிகளுக்கு தனித்துவ அடையாள எண் வழங்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மாவட்டத்தில் இது வரை 76 சதவீத விவசாயிகளுக்கு தனித்துவ அடையாள எண் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு விவசாயி ஒரே ஊரில் 2 அல்லது 3 இடங்களில் நிலம் வைத்திருந்தாலும் அல்லது வேறு கிராமங்களில் நிலம் வைத்திருந் தாலும் அனைத்து நில விவரங்களையும் பதிவு செய்ய வேண்டும். உதாரணமாக, ஒரு விவசாயி கறம்பக்குடி பகுதியில் 2 ஏக்கர், திருவரங்குளம் பகுதியில் 5 ஏக்கர் வைத்திருந்தால் இரண்டு நிலத்தையும் விவசாய அடையாள எண்ணில் இணைக்க வேண்டும். பிற மாவட்டங்களில் இருந்தாலும் நில

விபரங்களை இணைத்து கொள்ளலாம். ஏனெனில் உரங்கள் வாங்கும் போது பதிவு செய்துள்ள 2 ஏக்கருக்கு தேவையான உரங்கள் மட்டுமே வாங்க முடியும். கூடுதலாக உரங்கள் வாங்க முடியாது. இவற்றைத் தவிர்க்க விவசாயிகள் தங்கள் சாகுபடி நிலங்கள் அனைத்தையும் அடையாள எண்ணில் பதிவு செய்வது அவசியமாகும்.

எனவே, அனைத்து விவசாயிகளும் தங்கள் விவசாய அடையாள எண்ணுடன் விடுபட்ட நில விவரங்களை பதிவு செய்து பயனடையு மாறு புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சு.சுந்தரமகாலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# தென்னையில் பூச்சி மற்றும் நோய் தாக்கம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு

தேனி, ஜுலை 29

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட கோகிலாபுரம் கிராமத்தில் விவசாயிகளுக்கு தென்னையில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய் தாக்கம் மற்றும் அவற்றை கட்டுப்படுத்தும் மேலாண்மை முறைகள் குறித்து விழிப்புணர்வு மற்றும் செயல்விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது.



கலசலிங்கம் பல்கலைக்கழக வேளாண் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்கள், கிராமத் தங்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்நிகழ்ச்சியை நடத்தினர்.

இதில் தென்னை மரங்களில் காணப்படும் முக்கிய பூச்சிகள் மற்றும் நோய்களின் அறிகுறிகள், அவற்றால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் ஒருங்கிணைந்த முறையில் அவற்றை கட்டுப்படுத்தும் மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம் மூலம் எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், விவசாயிகள் மாணவர்களுடன் கலந்துரையாடி தங்களது சந்தேகங்களை கேட்டறிந்து, தென்னை பயிரில் பூச்சி மற்றும் நோய் தாக்குதலை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உரிய மேலாண்மை முறைகளை மேற்கொள்வது குறித்து பயனடைந்தனர்.

இந்நிகழ்ச்சியில் வேளாண் கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள் சாண்டியோ சாஜி, ஆனந்தமரி ராஜ், செல்லத் துரை, கஜேந்திரன், வஜில் மற்றும் நந்தகோபாலகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்று விவசாயிகளுக்கு செயல்விளக்கம் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**